தமிழர் நேசன்

(தமிழர் கல்விச்சங்கத்துப் பத்திரிகை)

தோட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு—திருக்குறள்.

தொகுதி VI. { துந்துபிஸு மார்கழிமீ } பகுதி 9.

வாக்சீன் இடுவதைப் பற்றிய புதிய கொள்கை.

New Vaccination Theory.

லண்டன்மாநகரில் பிரசுரமாகும் டைம்ஸ் பத்திரிகையின்
விசேஷ வைத்திய சாஸ்திர நிபுணர் எழுதியதினின்று
ஸ்ரீமான் P. N. அப்புஸ்வாமி ஐயர் B.A., B.L.,
தொகுத்து எழுதியது.

ஐரோப்பாவுக்குத் தலைநகர் என்று கொண்டாடப்படும் பாரிஸ் மா நகரில் மிகவும் பிரசித்தி பெற்ற ஆராய்ச்சி சாலை ஒன்று இருக்கிறது. அது பாஸ்டியர் (Pasteur) என்ற ஒரு மகானால் ஸ்தாபிக்கப்பட்டது. ஆகையால் அதற்கு பாஸ்டியர் இன்ஸ்டிட்யூட் (Pasteur Institute) என்று பெயர்.

கொலைத்தொழிலைச் செய்யவல்ல இரசாயன சாஸ்திரத்தை எவ்வாறு மனித வருக்கத்தினருக்கும் இப்பூமியிலுள்ள பிற உயிர்களுக்கும் சிறந்த நற்பயனை அளிக்கச்செய்ய கூடுமென்னும் அரிய ஆராய்ச்சிகளை அந்த ஆராய்ச்சி சாலையில் நடத்திவருகிறார்கள். நாய்க்கடி விஷத்தால் உண்டாகும்

கொடிய நோய்க்குச் சிகிச்சை முறைகளை அங்கு தான் கண்டுபிடித்தனர். பாம்புக்கடி, அநேக வகை விஷ ஜுரங்கள், வைசூரி முதலியவற்றின் இயற்கையையும் அவற்றிற்கு உரிய சிகிச்சை முறைகளையும் இன்னும் இவைபோன்ற விஷயங்கள் பிறவற்றையும் அங்கு ஆராய்ந்து அறிய முயன்று வருகின்றனர்.

வெகு காலமாக அங்கு மைக்ரோப் (Microbe) எனப்படும் நுண் உயிர்கள் எவ்வாறு உடலுள் புகுந்து, எங்கு நிலைத்துப் பெருகி, எப்படி நோயை விளைவிக்கின்றன, என்பதைப்பற்றி வெகு கவனத்துடனும் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

சிறிது காலத்துக்குமுன் டாக்டர் பெஸ்ரெட்கா (Dr. Besredka) என்பவர் இவ்விஷயத்தைப்பற்றிப் புதியதொரு கொள்கையை எடுத்துக்கூறினர். அதை அவ்வாராய்ச்சி சாலையில் மிகவும் கவனத்துடன் சோதித்து வருகின்றனர். அக்கொள்கை என்னவெனில் நமது உடலுள் புகுந்து பல வகையான நோய்களை விளைவிக்கும் நுண் உயிர்கள் (Microbes) நமது உடலில் அவைகளுக்கு என்று பிரத்தியேகமான குறிப்பிட்ட சில உறுப்புகளையே பலமாய்த் தாக்குகின்றன. மேற்கூறிய நுண் உயிர்கள் நமது உடலுள் முதல் முதல் புகும்போது எவ் உறுப்பின் வழியால் புகுந்த போதிலும் உடலுள் புகுந்தபின், அவைவற்றுக்குப் பிரத்தியேகமானது எனக்கூறத்தகும் குறிப்பிட்ட ஓர் உறுப்பையே தவறாது அடைந்து, அங்கு தங்கி, நன்கு வளர்ந்து, மேன்மேலும் நோயை விளைவிக்க முயல்கின்றன. இவ்வாறு நுண் உயிர்களால் தமக்குச் சொந்தமானவைபோலப் பாராட்டப்படும் சில குறிப்பிட்ட உறுப்புக்களே நுண் உயிர்களை வளரச்செய்யும் விளைநிலங்கள் ஆகின்றன.

உதாரணமாக, டைபாய்டு (Typhoid) என்னும் விஷ ஜுரத்தை உண்டாக்கும் நுண்உயிர்ப்பாசில்லைகளை (Bacilli) அழுக்கு இரத்தக்குழாயினுள் (Vein) செலுத்தினால் அவை இரத்தம் போகிற வழியெல்லாம் போகின்றன. இரத்தமானது அவைகளைத் தூக்கிக்கொண்டு குடலின் சுவரை அடைந்த பின்பு அங்கே தங்க ஆரம்பிக்கின்றன. பிறகுதான் அங்கு செழித்து வளரத்தொடங்குகின்றன.

அதேமாதிரி ஆந்திராக்ஸ் (Anthrax) என்னும் நோயை விளைவிக்கும் நுண்உயிர்கள் மேல்தோலையே தமக்குச் சொந்தமாகப் பாவித்துவருகின்றன. எளிதில் ஆந்திராக்ஸ் நோயுறும் ஜந்துக்களுக்குக் கூட மேற்கூறிய பாசில்லைகளை உட்கொண்டால் ஒரு தீங்கும் உண்டாவதில்லை. மேல்தோலில் மாத்திரம் அவற்றுக்கு தங்க வழிவிடாதிருந்தால் அவற்றால் ஒரு கெடுதியும் விளைவிக்க முடியாது.

இதிலிருந்து ஏற்படுகிறது என்னவென்றால் குறிப்பிட்ட ஒரு நோயை விளைவிக்கவல்ல நோய்வித்துக்கள் உடலின் உள்புகுந்த மாத்திரத்திலேயே அந் நோய் உண்டாக்கப் படுவதில்லை. குறிப்பிட்ட ஒருவகை நோய்வித்தும், நோயை விளைவிக்கவல்ல நுண்உயிரும் அதற்கு சொந்தமெனக் கூறத் தகும் குறிப்பிட்ட ஓர் உடலுறுப்பும் ஒன்றாகச் சேர்ந்தாலன்றி நோய் உண்டாவதில்லை. ஆனதுபற்றி, குறிப்பிட்ட ஒரு நோயை வராது தடுத்தற்கு மிகவும் எளிதான வழி என்னவெனில் அந்த நோயை உண்டாக்கவல்ல நோய் வித்துக்களுக்கு உரிய ஒரு குறிப்பிட்ட விளைநிலத்தை, எப்படியாவது, அந் நோய் வித்துக்களை போஷிக்கத் தகுதியற்றதாகச் செய்து விடுவதேயாம்.

கடைசிவரை ஆழ்ந்து பரிசோதிக்கும்பொழுது உடலில் உள்ள உறுப்புகளுள் ஒவ்வொன்றும் ஒரே வகையான

செல் (Cell) அல்லது கண் அரை எனக்கூறத்தகும் அணுப் பொருள் தொகுதியால் அமைக்கப்பட் டிருந்தபோதிலும் மேற்கூறிய முதற்பொருளாம் செல்கள் வேவ்வேறு பொருள் களைத் திரட்டி வெவ்வேறு வகையாய்ச் சேர்வதால், உடலில் உள்ள உறுப்புக்களின் தோற்றத்திலும், அமைப்பிலும், இயற்கையிலும் அனேகம் மாறுபாடுகள் உண்டாகின்றன. ஆகையால்தான் நோய்வித்துக்கள் ஒரு உறுப்பையோ, அல்லது உறுப்புப் பொருளாகும் கண்ணறைத்தொகை(Tissue) யையோ, பாதத்து இன்னொரு உறுப்பையாவது, உறுப்பு பொருளையாவது தாக்காது விட்டுவிட நேரிடுகிறது.

மேலே கூறியதிலிருந்து, காக்கப்படவேண்டியது, காப்பு இடத்தருவது உடலில் எங்கும் ஓடும் இரத்தம் அல்ல என்பதும், எந்த உறுப்பில் (Organ) அல்லது எவ்வகைக் கண்ணறைத்தொகையில் நோய்வித்துக்கள் தங்கி விளையக் கூடுமோ அந்த உறுப்புக்கும் அந்தக் கண்ணறைத்தொகை யினத்துக்குமே காப்பு இடுவதுதான் தகுதியென்பதும் தெளிவாகும்.

இது புதிதாய்க் கிடைத்த அறிவு. இனி ஆராய்ச்சி செய்யவேண்டிய துறைகளே இதனால் வேறு ஆகிவிட்டன. இதுவரை கிட்டிய அறிவைப் பயன்படுத்த ஆரம்பித்தாய்விட் டது. டைபாய்டு, வாந்திபேதி முதலிய குடல் நோய்களில் அவற்றுக்குரிய வாக்சீன் (Vaccine) களை முன்போல இரத் தத்தினுள் ஊசிக்குழாய் வழி புகுத்தாமல் வாயின் வழியா கவே கொடுத்துப்பார்த்ததில் அதிகமாய்க் குணம் தெரிந்த தென்று சொல்லுகிறார்கள். உள்ளுக்கு சப்பிடப்பட்ட வாக் சீன் (Vaccine) ஆகாரக்குழாய் (Gullet) வழியாய் வயிற் றுக்குள் (Stomach) சென்று, அங்கிருந்து குடலினுள் புகுந்து, அங்கே நோய்வித்துக்களுக்கு விளைநிலமான குடல்

சுவரில் படிந்து அவற்றை நோய்விதைகளுக்குப் பயன்படா வண்ணம் செய்துவிடுகின்றன. அதனால் காப்பு, அல்லது ரக்ஷை, (Immunity) ஏற்படுகிறது.

அதேமாதிரி தோலையொட்டிய வியாதிகள் ஏற்பட்டால் அதற்கு வேண்டிய வாக்சீனைத் தோலின்மீது தடவியாவது, அல்லது தோலில்மாத்திரம் பரவும்படி ஊசிக்குழாயின்வழி தோல்தகடுகள் இரண்டுக்கு நடுவே செலுத்தியாவது பார்த்தால் நோய் சீக்கிரத்தில் குணம் அடையக்கூடும்.

நமது உடலைத்தாக்கி, நம்மை நோய்க்குள்ளாக்கும் சத்துருக்களாம் நோய்விதைகளை அணுகித் தாக்கித் தொலைக்க முக்கியமான வழி ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது: நமது இரத்தம்தான் அந்தவழி: வேறு சௌகரியமான வழி கிடையாது: என்று இதுவரை நாம் எண்ணியிருந்தது எல்லாம் தவறு என்று ஏற்படும்போல் இருக்கிறது. இப்பொழுதுதான் இந்த விஷயத்தை ஒட்டிய ஆராய்ச்சிகள் துவக்கப்பட்டு மேன்மேலும் நடந்துவருகின்றன. இன்னும் ஒன்றையும் ஒரே நிச்சயமாகச் சொல்லுவதற்கு இல்லை. இன்னும் நடத்தப்பட்டுவரும் சோதனைகளால்தான் இதன் உண்மை ஸ்தாபிக்கப்படவேண்டும். ஆயினும் பிற துறைகளில் நடத்தப்பட்டுவரும் ஆராய்ச்சிகளிலிருந்தும் மேற்கூறியவற்றிலிருந்தும், பாரிஸ் மாநகரத்துப் பாஸ்டியர் இன்ஸ்டிட்யூட்டில் நடத்தப்பட்டு வரும் மேற்கூறிய சோதனைகளினின்று எழுந்த கொள்கை சரியான கொள்கையாகவே இருக்கலாமென்று சொல்ல இடம் இருக்கிறது.

அரை நாள் பள்ளிக்கூடங்கள்

Half Day Schools

ஸ்ரீமான் V. நாராயண ஐயர், M A., M.L., எழுதியது.

ஒன்பது முதல் பதினைன்கு வயது வரையுள்ள சிறுவர் சிறுமிகளை பிரதிதினம் ஆறு மணிக் கூறுதான், வேலை வாங்கலாம்: அதாவது அரை நாள் வேலை தான் அவர்களைச் செய்யச் சொல்லலாம் என்று இந்தியக் கைத்தொழில் சாலைச் சட்டங்கள் விதிக்கின்றன. ஆகவே இவர்கள் வேலைசெய்யாத பொழுது எழுதப் படிக்கக் கற்றுக் கொள்வதற்கு சௌகரியமாக பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்த வேண்டியது அவசியம். இவ்விதப் பள்ளிக்கூடங்களே அரைநாள் பள்ளிக்கூடங்கள் அல்லது அரைப் பள்ளிக்கூடங்கள் எனப்படுவன. இவைகளில் பெரும்பாலரும் யந்திரசாலைகளிலும் மற்ற கைத்தொழிற் சாலைகளிலும் உழைக்கும் சிறுவர் சிறுமியரே படிக்க வருவார்களாதலால் அவர்களுக்கு உபயோகப் படக்கூடியதான விஷயங்களையே முக்கியமாகக் கற்பித்தல் கடனாகும். இந்தியாவில் கைத்தொழில் அபிவிருத்திக்குத் தடையாக நிற்பது கைவேலைக்காரர் எழுதப் படிக்கத்தெரியாமல் சாஸ்திரப் பயிற்சி அடைவதற்கு வேண்டிய கல்விகற்காதவராய் இருப்பதே. கைத்தொழிலாளருக்கு அடிப்படியான (Primary) கல்வியையாவது கற்றுக் கொடுப்பது அவசியம் என்று சமீபத்தில் நடந்த கைத்தொழில் விசாரணைக்காரர் (Industrial Commission) முன் சாக்ஷியம்சொன்னவர் எல்லோரும் ஒப்புக் கொண்டனர்; அப்படியிருந்தும் கைவேலை யாட்களை உப

போஷிக்கும் இயந்திரசாலை (Mill) முதலாளிகள் முதலியோர் அவர்களை படிப்பிப்பதில் முயற்சி செய்வதாகத் தெரியவில்லை. மேலதிகாரிகளுக்கு நாட்டு பாஷைகளில் பேசத் தெரியாததா லும் மொழிபெயர்ப் பாளிகளை இடை வைத்துக்கொண்டு பேசவேண்டி யிருப்பதாலும் உண்டாகும் கஷ்டங்களை நிவர்த் திக்கும் பொருட்டு இச்சிறுவர் சிறுமிகளுக்கு ஆங்கிலம் பே சக் கற்றுக் கொடுப்பது அவசியம் என்று அறிந்த ஒரு சிலர் மட்டுமே அவ்வித பள்ளிக்கூடங்களை ஸ்தாபித்து நடத்தி வருகின்றனர் ; அவற்றிற்கு ஒரு உதாரணமாகச் சென்னை யில் "Buckingham and Carnatic Mills Joint School" பக்கிங்ஹாம் கர்நாடிக் யந்திரசாலைகளின் பள்ளிக்கூடம் என்று நடைபெறும் பள்ளிக்கூடத்தைப் பற்றி இங்கு எழு துவது பொருந்தும்.

இந்தப் பள்ளிக்கூடம் 1904ஆு ஸ்தாபிக்கப்பட்டது. பத்து வருஷங்களாக இரண்டு ஐரோப்பிய பெருமாட்டிகள் தலைமை உபாத்தியாயம் வகித்து இந்தப் பள்ளிக்கூடத்தை நடத்தி வருகின்றனர் ; பள்ளிக்கூடத்திற்கு அரை வேலைக் காரர் எல்லோரும் வரவேண்டுமென்ற கட்டாயம் இல்லை. இருந்தாலும் சுமார் 1700 சிறுவர், சிறுமியரில் 1300 வரை படிக்கவருகிறார்கள். முழுவேலைக்காரர்களின் குழந்தைகளும் இங்கே படிக்க வருகிறார்கள். அரை வேலைக்காரர் இருவகை யாவர், காலை 6-மணி முதல் 12-மணி வரை வேலை செய்பவர் மாலை 2 மணி முதல் 4-30 மணி வரை பள்ளிக்கூடத்தில் படிக்கிறார்கள். 12½-மணி முதல் மாலை 6-மணி வரை வேலை செய்பவர் காலையில் 7-மணி முதல் 10-மணி வரை படிக் கிறார்கள். இவர்கள் வேலை செய்து சலிப்படைந்திருப்பார் களாகையாலும், படிப்பதற்கு அதிக அவகாசம் இவர்களுக்கு இல்லையாதலாலும், படித்த பின் சம்பாதிக்க வேண்டியவர்

களாய் இருப்பதாலும், இவர்களுக்கு அவசியமாய் பயன்படக் கூடியதான படிப்பு மட்டுமே கற்றுக் கொடுக்கப்படுகிறது. அஃதென்னவெனில்: தாய்ப் பாஷையில் எழுதப்படிக்க அறிதல், ஆங்கிலத்தில் பேசத்தெரிந்து கொள்ளுதல், கணக்கு, தோட்டவேலை, சுகாதார விளக்கம், கைத்தொழிற் பயிற்சி என்பனவாம். மேல் வகுப்புகளில் உபாத்தியாயர்கள் சம்பாஷணை முகமாக பூகோள சாஸ்திரம், சரித்திரக் கதைகள், துரைத்தன முறை, முதலிய வற்றையும் கற்றுக்கொடுக்கிறார்கள்.

முதலில் இந்தப் பள்ளிக்கூடத்திற்கூட மாணவர்கள் எல்லோரும் எழுதப்படிக்கமட்டும் அறிந்து குமஸ்தாக்கள் ஆவதற்கு பிரியப்பட்டார்களே யொழிய கைத்தொழில்வேலையில் அமரவேண்டும் என்ற எண்ணம் எழும்பாதிருந்தது. படித்தானதும் அவர்கள் சாமான்களை விற்றுமுதல்செய்து கணக்குகள் வைக்கும் ஆபீஸிலேயே தங்களுக்கு வேலை கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டனர். இந்தவிதப் படிப்புகூடாதென்று மேலதிகாரிகள் நாலாவது வகுப்புக்குமேல் படிப்பு சொல்லிக்கொடுப்பதில்லை என்றும், இவர்களுக்கு இயற்கையாயுள்ள கைத்தொழில் ஆசையைவளர்த்து நல்ல கைவேலைக்காரர்களாகவேண்டு மென்றும், பாடங்களைப் படிப்பதோடு இராமல் கைத்தொழில்களில் பழகுவதற்கும் ஆயுதங்களை உபயோகப்படுத்தக் கற்பதற்கும் வேண்டிய சௌகரியங்கள் செய்துகொடுத்து கற்பிக்க உபாத்தியாயர்களையும் வைத்திருக்கிறார்கள். இவ்விதமாக, தச்சுவேலை, கருமான்வேலை, ஈயம்பூசுதல், தையல்வேலை, கூடைமுடைதல், வர்ணவேலை, சில்லரைரிப்பேர் செய்தல் முதலியவற்றைக் கற்றுக்கொள்ள தனித்தனி வகுப்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. கைவேலைசெய்து சம்பாதிப்பது இழிவல்ல. மேலும் கைவேலை

யைக்கொண்டு அதிகம் சம்பாதிக்கலாம் என்று நேரில் கற்றறிவதற்கும், இவை உதவுகின்றன என்பது இந்தப் பள்ளிக்கூடப் பையன்களிடமிருந்து முன்போல் குமஸ்தாவேலைக் கல்லாமல் கைத்தொழில் வேலைகளுக்கே மனுக்கள் கிடைப்பதினின்றும் வெளிப்படுகின்றது.

இந்த கைத்தொழிற் பழக்கச்சாலைகளில் எதில் எந்தப் பையன் வேலை செய்யவேண்டும் என்ற நிபந்தனை கிடையாது. அன்றன்று சாலையில் ஒவ்வொரு பையனும் தான் எதில் வேலைசெய்வது என்பதை நிச்சயிக்கலாம். அந்தச் சாலையில் இடமிராவிட்டால் வேறு தனக்கிஷ்டமானசாலை ஒன்றிற்குப் போகவும் இவ்விதம் சுயேச்சை கொடுப்பதினின்று ஒருவித குழப்பமும் ஏற்படுவதில்லை. பள்ளிக்கூடம் கலைந்த பின்பும் சனி ஞாயிறு முதலிய ஒழிவு நாட்களிலும் இந்தச் சாலைகளுக்குப்போய் வேலை கற்கலாம்; இவ்விதம் பையன்களை அவரவர் போக்கிலேவிட்டு ஆயுதங்களை எப்படி உபயோகிப்பது என்பதை கற்று தங்களுக்கு இஷ்டமான வேலை எது என்று தாங்களே நிர்ணயிக்க இவ்விதப் படிப்பு முறை ஹேது ஆகின்றது. இவ்விதம் பயன்படுவதற்காகவே அந்தந்தத் தொழில்களில் ஏற்படும் சாதாரணவேலைகளையும் அந்தந்தத் தொழிலின் போக்கை விளக்கும் வேலைகளையுமே கற்பிக்கிறார்கள். இங்கே கற்பிப்பதற்கும் பின்பு நிஜவேலை செய்யும்போது செய்யவேண்டிய காரியங்களுக்கும் வித்தியாசம் ஏற்படக்கூடாது. ஆகையால் இயந்திரசாலைகளில் வேலைசெய்யும் ஆட்களையே உபாத்தியாயர்களாக்கி, அங்கே அவசியம் செய்யவேண்டியதான காரியங்களையே இங்கு பையன்களைக்கொண்டு செய்விக்கிறார்கள். இவ்விதமாக 14 வயதுவரை பழகியபின்பு பையன்கள் அவரவருக்கு எந்தத் தொழிலில் பிரியமுண்டாகிறதோ அந்த வேலைகற்க சிற்றாள் (Apprentice) களாக நியமிக்கப்படுகின்றனர்.

பையன்களுக்கு வேண்டிய சௌகரியங்களும் மேலதிகாரிகள் செய்திருக்கிறார்கள். பள்ளிக்கூடத்திலேயே சமையலறை ஒன்று இருக்கிறது. இதில் வீட்டில் சாப்பிட்டுவிட்டு வரமுடியாத பையன்களுக்கு சாப்பாடு போடப்படுகிறது. மத்தியானவேளைக்கு அவரவர்கள் கொண்டுவரும் சிற்றுண்டிகளை வைத்துக்கொண்டு சாப்பிட இடமிருக்கிறது. காபியும் வேறு ஆகாரமும் இலாபம் வைக்காத சொற்பவிலைக்கு கொடுக்கப்படுகின்றன. பையன்கள் வேண்டுமானவற்றைச் சமைத்துச் சாப்பிடுவதற்கு விறகு முதலியன இனாமாக உதவப்படுகிறது.

பையன் ஸ்நானம் செய்வதற்கு அருகில் ஒரு குளம் வெட்டப்பட்டிருக்கிறது, வேஷ்டி தோய்த்தபின் "இஸ்திரி" போடுவதற்கு வேண்டிய சாமான்களும் கொடுக்கப்படுகின்றன.

இயந்திரசாலை வைத்தியர்கள் அடிக்கடி பையன்களுடைய தேக சௌக்கியத்தைப் பற்றி பரிசீலனை செய்கிறார்கள். உடம்பைத் தேற்றுவது அவசியமென்று இருக்கிற பலஹீனப் பையன்களுக்கு மருந்து முதலியவற்றை உதவுவதுடன் சாதம் ரொட்டி தேத்தண்ணீர் முதலியவையும் இலவசமாய் கொடுக்கப்படுகின்றன. ஜுரம் முதலிய நோய்களால் வருந்தும் பையன்களை சௌகரியங்களற்ற அவர்கள் வீடுகளுக்கு அனுப்புவதைவிட, பள்ளிக்கூடத்திலேயே ஒரு புறமாய் படுத்திருக்கச் செய்வது மேல் என்று, அவர்கள் இருப்பதற்கு பிரத்தியேகமாக அறைகள் கட்டப்பட்டிருக்கின்றன.

இந்த இயந்திரசாலைகளின் அதிகாரிகள் இவ்விதம் சிறுவர் சிறுமியரைப் படிப்பிப்பதை அவர்கள் ஒரு பெருமையாகக் கொள்ளவில்லை. எங்கள் சுயநலத்திற்காகவே இவற்றைச் செய்கிறோம் என்றே ஒளியாமல் ஒப்புக் கொள்ளுகிறார்கள்,

இந்த பள்ளிக்கூடங்கள் ஏற்படுமுன் இயந்திரசாலைகளில் வேலைசெய்யும் சிறுவர்நேரே அடங்குவதில்லையாம்; ஒழுங்காய் வேலை செய்வதில்லையாம்; வேலை கற்றுக்கொண்டு திருந்தச்செய்து முன் வரவேண்டும் என்ற அவா அவருக்கு இல்லையாம். கைத்தொழிலில் பிரியமற்று படிப்பிருந்தால் குமாஸ்தாக்கள்போல் கைவேலைசெய்யாமல் வீற்றிருக்கலாமே என்ற எண்ணமுற்றிருந்தனராம். இவை எல்லாம் இப்பொழுது மாறிவிட்டனவாம். பையன்கள் இப்போது நடை யுடை பாவனைகளில் திருந்தி யிருக்கிறார்களாம். கட்டுக்கு அடங்கி நடக்கிறார்களாம் கைத்தொழிலை ஆசையுடன் கற்று மேல் மேலும் வேலைக்கிரமத்தில் உயரவேண்டுமென்று உழைக்கிறார்களாம். உடம்பைப் பரிசுத்தமாய் வைத்துக்கொள்கிறார்களாம். படிப்பால் புத்தி விசாலித்திருக்கிறது. ஆயினும் கைத்தொழிலின்மீது எவ்வித அருவருப்பும் ஏற்படாமலும் இருக்கிறது. இவ்வித சீர்திருத்தங்களுக்கு காரணம் இந்தப்பள்ளிக்கூடமே.

இதைப்போன்ற பள்ளிக்கூடங்கள் கைத்தொழில் சாலைகளிலுள்ள ஒவ்வொரு நகரத்திலும் இருக்கவேண்டும். இவ்வித பள்ளிக்கூடங்களைநடத்துவது தங்களுக்கே நன்மையை விளைக்கும் என்று ஒவ்வொரு இயந்திரசாலை முதலாளியும் அறிந்து கொள்ளவேண்டும். ஆனால் இந்தக்காரியம் அவர்கள் தான்செய்யவேண்டும் என்று இராஜாங்கத்தாரும் பொது ஜனங்களும் சும்மாவிருப்பது சரியல்ல, நாட்டிலுள்ள ஜனங்களுக்கு அவரவருக்கு ஏற்றவாறு படிப்பு முறைகளை ஏற்படுத்தி உதவுவது இராஜாங்கத்தாரினுடையவும் பொது ஜனங்களினுடையவும் கடமையேயாகும் இந்தக் கடமை உணர்ந்து இவ்விருதிறத்தாரும் இம்மாதிரிப் பள்ளிக்கூடங்களை ஸ்தாபித்து நடத்துவது அவசியம் என்பதை எல்லோரும் உணரவேண்டும்.

மதிப்புரை.

Review.

தூதகடோற்கசம் (விலை அணா ஐந்து.) காளிதாஸருக்கு முன் விளங்கி அவரால் சிறப்பித்துக் கூறப்பட்டவர் பாஸர் என்ற கவி. அவர் இயற்றியவையெனப் பதின்மூன்று நாடகங்கள் சில வருஷங்களுக்குமுன் திருவனந்தபுரத்தில் அச்சாகி வெளியிடப்பட்டன அவற்றுள், மகா பாரதக் கதையையொட்டிய ஐந்து நாடகங்களுள் தூதகடோற்கசம் என்பது ஒன்று. அபிமன்யு பதின்மூன்றாம் நாட்போரில் கௌரவச் சைனியத்தால் சூழப்பட்டு செயத்திரதன் கையால் மரணம் அடைந்ததைக காந்தாரியும், திருதராஷ்டிரனும், செயத்திரதன் மனைவியாகிய துச்சலையும்கேட்டு விசனிப்பதும், பிறகு அவர்களிடம் இந்தச் செய்தியை நேரில் அறிவிக்கவேண்டுமென்று சகுனி; துச்சாதனன் இவர்களுடன் துர்யோதனன் சந்தோஷமாக வருவதும், அவர்கள் அங்கே இருக்கும்போது, கடோத்கசன் கிருஷ்ணன் தூதனுப்பியதாக வந்து "என் மகனைக் கொன்றவனை அடுத்த நாள் கொல்லாவிடின் தீப்புகுவேன்" என்று அர்ச்சுனன் சபதம் செய்ததை அறிவித்துச் சென்றதும் நாடகக் கதை.

இதை ஸம்ஸ்கிருதத்தினின்றும் சுலபமான தமிழில் நாடகத்தின் கௌரவத்திற்கு யாதொரு குறைவுமின்றி நன்கு மொழிபெயர்த்த சென்னை இராஜாங்கக் கையெழுத்துப் புத்தகசாலைத் தமிழ்பண்டிதராயிருந்து மயிலாப்பூர் ராமகிருஷ்ண ஹோம் ஹைஸ்கூலில் தமிழ்ப் பண்டிதராயிருக்கும் கோ. சேஷாத்திரி ஐயருக்கும், அவருடைய தந்தையாரும் பதிப்பாசிரியருமான அடையாறு நாஷனல்ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் அ. கோபாலையருக்கும், தமிழர் கடமைப் பட்டிருக்கின்றனர். இதுபோல் வேறு நாடகங்களையும் மொழிபெயர்த்து தமிழருக்கு உதவவேண்டுமென்ற இவர்களது எண்ணமும் இங்கு குறிப்பிடத்தக்கது.

நா.

தாயுமானவர்.

Thayumanavar.

ஸ்ரீமான் T. R. ராஜகோபால ஐயர் எழுதியது.

(தொடர்ச்சி)

காடுகளில், காமத்தையுடைய நாயும், பேராசை நிரம்பிய ஓநாயும்; கபடத்தின் உருவமான சர்ப்பமும், தந்திர நரியும், குரூர வரிப்புலியும், வல்லமை பொருந்திய கோளரியும், பற்றுக்களை யொத்த நரிப்பள்ளங்களும், (Quicksands) பழிக்குப்பழி வாங்கும் களிறும், பொதுமகளிரின் தன்மையையொத்த காட்டாறுகளும், பொன்னைப்போல் மயக்கும்பனி மலைகளும், அதுதாபம் வருத்தங்களுக்குச் சமமான கூரிய முட்களுங் கற்களும், கெடும் பார்வையுடைய ராஜாளியும், தமோகுணம் பூரித்துள்ள தேமாங்கும், விகார நடிப்பும், பரிகாச குணமுமுடைய மர்க்கடமும், நிமிஷந்தோறும் வேற்று நிறம் தரிக்கும் பச்சோந்திகளும், சுகபோகங்களின் குணமும் பலனுமுடைய பேய்த்தேரும் (Mirage) காணப்பட்டு வருகின்றன. இதுபோலவே, நாடுநகரங்களிலும், உடலமைப்பில் மானுடராசியைச் சேர்ந்தவராயினும், குண நடத்தைகளில் அம்மிருகங்களுக்கும் பொருள்களுக்கும் கீழான குணாதிசயங்களுடன் பலவாயிரம் மாந்தர்கள் உஜ்ஜீவித்து வருவதை அறியாதவர் ஒருவருமில்லை. அடவிகளில் மேற்சொல்லிய விலங்கினங்கள் எல்லாப்பக்கங்களிலும் சிதறிப் பதுங்கிக் கிடப்பனபோல் மாந்தருலகிலும் மேற்காட்டிய குணங்கள் பரவியிருக்கின்றன. எக்குணம் எச்சமயத்தில் முன்தோன்றி அச்சுறுத்தி அழிக்குமோ என்பதை அக்ஞா

னிகள் அறியார். அறப்போர்க்கும் அறவோர்க்கும் அவ் விழிய அபாய குண நடத்தை பொருந்தியவர் உடலுளராகத் தோன்றிக் கறுழ்ச்சியிலழுத்தி வருத்துகிறுர்கள். இவை களை யெல்லாம் அக்னியாகிய மையில் இருப்புப் பேனவைத் தோய்த்து நன்கு பதிந்து என்றும் ஜ்வலிக்கும்படி எழுதித் தெரிவித்த பெருமான் நமது தாயுமானவர். மூடபக்தி, பயம் சூாத்திரம் முதலானவைகளால், வேடர்களிடையில் அகப்பட்டுப் பரிதபிக்கும் மானைப்போல், சூழப்பட்டுத் திகைக்கும் ஆன்மாக்களுக்கு அவைகளிலிருநது தப்பி அபவர்க்கம் எய்துதற்கான நன்மார்க்கத்தை அறிவுறுத்தும் ஞானி இவரே. பீரங்கிகளின் கர்ச்சனை, போராயுதங்களின் முழக்கம்; யுத்த வீரர்களின் கம்பீர நடை, வீடாகளின் படாடோபங்கள், ராஜ்யங்களின் எழுச்சி - வீழ்ச்சி - வல்லமைகள், வெகு துன்பத்திற்குள்ளாக்கி அழிக்கும் இயற்கையின் போக்கும் செயற்களும், கங்கு கரையில்லாத் திமைகளும் அலந்தலைகளும், அருவருப்பு - பொருளழிவு - சரீரக் கேடுகள், மரணத்திலோ, அலைது வேறு எக் காரணத்திலோ சிநேகிதர் - உறவினர்க்குள் உண்டாகும் பிரிவும் - வித்தியாசங்களும், மனப்போராட்டங்கள், பயனற்ற ஆசைகள், நிறைபெறுத நம்பிக்கை யாகியவைகளெல்லாம், இவருடைய பாடலகளை எடுத்துப் படிக்கும் மாத்திரத்தில் நெருப்பு முன் பஞ்சுபோல், எரிநது பறக்கும்.

ஐம்புலன்களையும் திகைக்கச் செய்து, உள்ளத்தைக் கவர்ந்து, இதயத்தை கலக்குவதான விசித்திர இவ்வுலகும் உலகாதிகளும் மாயை; இவ்விநோதக காட்சிகளின் மெய்க் குணம் ஓர் சிலந்திக் கூட்டினதை ஒத்ததாகும்; வாழ்க்கை ஓர் சொப்பனம்; யௌவனம் நீர்குமிழி போன்றது; ரசத்தைக் கிரஹித்துச் சக்கையை உமிழ்ந்து விடும் விஷச் செடி

களை யொத்தவர் காரியர் ; வாழ்க்கை யாகிய கோப்பையில் சுகபோகமாகிய பானகத்தை வார்ப்பின், தேகவலிமை குறையும், கண்களின் ஜ்வலிப்பு மழுங்கும், செவ்விரத்தம் படி விஷமாக மாறிப் பற்பல நோய்களை உண்டு பண்ணும், ஆண்மை சிதைந்துபோம், ஆனந்தம் அழுகையாகும், சூனிய எண்ணங்கள் குடியேறும், ஹிருதயம் பிளந்துபோம். இன்னும், ஓர் பலி பீடத்தைச் சுற்றிக் கணக்கற்ற ஆடுகளை நிறுத்தி யிருப்பதாகவும், ஆங்காங்கு பசும் புற்களையும்-தழைகளையும் இறைத்திருப்பதாகவும், அவ்வைகள் ஓடிவிடா வண்ணம் தக்க பந்தோபஸ்து செய்திருப்பதாகவும் நினைத்துக் கொள்வோம் ; ஒவ்வொன்றாக அவைகள் பலி செய்யப்படுவதை மற்ற ஆடுகள் தம் கண்ணாரப் பார்த்து ஓடிப் பிழைக்க வழியில்லாது உள்ளம் பதறி, இனித் தமக்கும் விரைவில் மரணம் நிச்சயமென எண்ணி அவதிப்பட்டுக் கொண்டிருப்பினும் இடையில் இதை மறந்து, தாம் மாத்திரம் ஜீவித்திருக்கப் போவதாக ஏமாந்து, அப்பசுந் தழைகளைத் தின்று துள்ளிக் குதிக்கையிற்றானே ஓர் வலிய கரத்தால் மூர்க்கமாகப் பிடித்திழுத்தடக்கப்பட்டு கூரிய வாளினால் குரூரமாகத் துணிக்கப்பட்டு மாய்கின்றன. இது போன்றது மானுட வாழ்க்கையும். இவ்வாறு சில ஞானிகள் கொண்டு கூறியுள்ளார்.

இவருடைய பாடல்களெல்லாம் லௌகிக வாழ்க்கையையும், புருஷார்த்தமென்பது சிறிதேனுமில்லாத ஆண்களையும், பெண்மையைப் போக்கி வரும் பெண் பாலரையும், ஐம்புலன்களுக்கு மேலாக மனஹிருதயங்களும், இவைகளுக்கும் மேலாக ஆன்மாவும் உண்டென்பதை மறந்து அல்லது அவமதித்து யாவற்றையும் ஓர் இருட்டக மாக்கி, புலனுகர்ச்சியினின்றுண்டாகும் சுகமே பெருஞ் சுகமெனவும் நித்தியமென

வும் மற்[illegible] குதூகலித்து வரும் புன்[illegible]ரையும், பழித்துத் தூஷிப்பது போலவும். மிருதுவான செவிக்கு நாராசம் போலவும், போலிக்கலைஞர்க்குப் பயனற்ற சொற்றொடர்ச்சி போலவும் தற்கால விபரீத நாகரீகத்தினர்க்கு உருக்கி இரும்பை அவர்கள் மீது வார்ப்பது போலவும் தோன்றுவதினின்றும், "நாற்றச் சடலத்தை, ஒன்பது வாசனடை மனையைச் சோற்றுப் பசையினை, மும்மலப் பாண்டக் கொடக்கறையை, ஆற்றுப் பெருக்கன்ன கன்மப் பெருக்கை அடர் கிருமிச் சேற்றைத் துணை யென்ற நாய்" எனவும், "ஆழாழியென்ன வளவு படா வஞ்ச நெஞ்ச பாழான மாதர் மயற் பற்றொழிவ தெந்நாளோ !" எனவும் வெளி யிட்டிருப்பதினின்றும் இவரை மானுடத் துவேஷி - கடுந்துறவி - அல்லது சோக தத்வக்ஞனென முடித்து ஒதுக்கி விடக்கூடாது.

(தொடரும்)